# BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்



Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.



Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440




படம்: தமயந்தி


Bergen Tamilsk Avis - no.22 - November 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.22 கார்த்திகை - 2022

வணக்கம்!

உலக நாடுகள் முழுவதும் ஏதோவொரு அதிர்வலை தாக்கம் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. சுனாமி, கொரோனா, பூமி அதிர்வுகள், சுற்றுப்புறச்சூழல் தாக்கங்கள் என இயற்கையான அழிவுகளுக்குப்பால் உலக நாடுகளுக்கிடையேயும், நாடுகளுக்குள்ளேயும் நடைபெறுகின்ற யுத்தங்கள், அதனால் ஏற்படுகின்ற அழிவுகள், அவலங்கள் மனித குலத்தினை அதிர வைக்கிறது.

யுத்தரணங்களை சந்தித்திராத நாடுகள் எதுவும் உலகப்பந்தில் இல்லை எனலாம். அவற்றுள் நமது தாய்நாடான சிறிலங்காவும் அடங்குகிறது. 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழருக்கும் சிங்கள அரசுக்கும் இடையில் நிகழ்ந்த உக்கிரப்போர் உலகறிந்தது. தனிச் சிங்களச் சட்டம், பௌத்த மத ஆதிக்கம், கல்வித் தரப்படுத்தல், நில ஆக்கிரமிப்பு,வேலை வாய்ப்பில் இன பாகுபாடு என பல்வேறு ஒடுக்குமுறைகளினை தாங்க முடியாது தமிழ் இளைஞர்கள் பல பாகங்களிலும் இருந்து வீரத்தோடு போராடப் புறப்பட்டனர்.

நமது முன்னோர் அகிம்சை வழியில் 1956ம் ஆண்டிலிருந்து போராடி பயனற்றுப் போய்விட்டது. இனி ஆயுதப் போராட்டமே ஒரே வழியென தமிழ் இளைஞர்கள் தெருவில் இறங்கினர். போராட்ட களம் நோக்கி விரைந்த அனைத்துப் போராளிகளும் தியாகிகள். அவர்கள் போற்றப் படவேண்டியவர்கள். எத்தனை தமிழ் இளையவர்களின் ரத்தம் எமது மண்ணை சிவந்தமண் ஆக்கியது. எமது போராளிகளின் வீரம், தியாகம் கண்டு உலகே வியந்து நின்றது. ஆயினும் எமது நியாயமான போராட்டம் தோல்வியை தழுவியதற்கான காரணம் என்ன? இக்கேள்வியினை பலரும் பல கோணங்களிலும் ஆய்வு செய்து பதில்களை அடுக்கிக் கொள்ளலாம். இந்தியா, நோர்வே, அமெரிக்கா, சீனா என பல மேலை நாடுகளின் சூழ்ச்சிகள், தந்திரங்கள், ஆயுதங்கள் பலவற்றைக் காரணப்படுத்தலாம். அவற்றிற்கும் மேலாய் நாம் மிகப்பெரிய காரணர்களாய் உள்ளோம்.

ஆரம்ப காலத்திலேயே நமக்குள் எத்தனை இயக்கங்கள்? இயக்கங்களுக்குள் எத்தனை குழுக்கள்? எத்தனை தலைவர்கள்? தலைமைக்காக இயக்கங்களுக்குள் எத்தனை போராட்டங்கள்? நமக்குள் ஆரம்பத்திலேயே ஒற்றுமை இருக்கவில்லை. அதுவே பல சிறந்த இளைஞர்களைக் கொன்றது. கருத்துக் சுதந்திரமோ, திறந்த மனப் பகிர்வுகளோ இருக்கவில்லை. இதுவே நமது தோல்விக்கான அடிப்படைக்காரணமாகும். வெற்றியோ தோல்வியோ பல ஆயிரக்கணக்கான போராளிகள் தாய் மண்ணுக்காய் தமது உயிரினைக் கொடுத்துப் போராடி மடிந்துள்ளார்கள். அவர்களது நாமம் போற்றப்பட வேண்டும்.

அவர்கள் எமது வரலாற்று நாயகர்கள். மாவீரர் நாளாக கார்த்திகை 27ம் நாளினை விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்வுசெய்த நாளிலிருந்து, தமிழ் மண் தியாகிகளுக்காக தீபம் ஏற்றி துதி பாடி வருகிறது. இந்நாளில் எமது தேன் தமிழிதழும் அம்மறவர்களைப் போற்றி தலைவணங்கி நிற்கிறது.

Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674

### ரசியா - உக்ரைன் தொடரும் யுத்தம்



ரசியா - உக்ரைன் யுத்தம் உக்கிரமான தாக்குதல்களுடனும் இழப்புக்களுடனும் தொடர்கிறது.

ரசியாவினது ஏவுகணைத் தாக்குதல்கள் உக்ரைனின் பல மின்சாரக் கட்டமைப்புக்களை தாக்கியுள்ளது.

இதனால் அங்கு பலபகுதிகளில் மக்கள் மின்சாரமின்றி வாழ்ந்து வருகிறார்கள். தற்போது கடும் குளிர்கால நிலையாகையால் மக்களின் வாழ்நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பல நகரங்கள் இருளில் மூழ்கியுள்ளன. 2022 பெப்ரவரியில் ரசியாவின் உக்ரைன் மீதான படையெடுப்பிற்குப் பிறகு Kherson நகரம் ரஷியாவால் ஆக்கிரமிக்கப்பட்டது. இது டினிப்ரோ நதியின் மேற்குக் கரையில் ரசியாவின் ஒரே அடிவாரமாக இருந்து வருகிறது.

2021 இல் 283,500 மக்களைக் கொண்டிருந்தது. இந்த நகரம் மார்ச் முதல் நவம்பர் 2022 வரை ரஷிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது, ரஷிய ஆக்கிரமிப்பின் போது அதிகமான மக்கள் நகரத்தை விட்டு வெளியேறினர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மீண்டும் உக்ரைன் படையினர் Kherson நகரத்தினை மீட்டனர். இதனை அப்பகுதி மக்கள் சிறப்பாக கொண்டாடினர்.

ஆயினும் ரசியா நவம்பர் 26ம் நாளிலிருந்து அந்த நகரை நோக்கி பலத்த குண்டுத்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் மீண்டும் Kherson நகரிலிருந்து வெளியேறுகின்றனர். □


NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
31வருடகால ஊடகப்பணி


**புதிய புத்தகம் அறிமுகம்**

## உன்னத சங்கீதம்

நூலாசிரியர்: பானுபாரதி
(நோர்வே)






இந்தக் கட்டுரையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போது உதைபந்தாட்ட உலகக்கிண்ணம் சூடுபிடித்து அன்றாட பேசுபொருளாயிருக்கும். உலகின் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டுக்களில் ஒன்று உதைப்பந்தாட்டம். 2018ம் ஆண்டு நடைபெற்ற உதைபந்தாட்ட உலகக்கிண்ணத்தை 112 பில்லியன் மக்கள் பார்வையிட்டதாகக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இம்முறை இப்போட்டிகள் கத்தார் நாட்டில் நடாத்தப்படுகின்றன. உதைபந்தாட்ட உலகக்கிண்ண வரலாற்றில் முதன்முறையாக போட்டிகள் மத்திய கிழக்கில் நடாத்தப்படுகின்றன. இம்முறை கிண்ணத்தை வெல்லப் போவது யார் என்ற வினா பலர் மத்தியில் உள்ளது. அதில் ஒருவராக நீங்களும் இருக்கலாம். ஒரு போட்டியைப் பார்த்தபடியோ அல்லது பார்த்துவிட்டோ கூட இப்பத்தியை நீங்கள் வாசிக்கலாம். இம்முறை உலகக் கிண்ணத்தைப் பார்ப்பதில்லை என்ற முடிவில் நான் இருக்கிறேன். ஏன்?

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வே நாட்டின் உதைபந்தாட்ட அணியானது ஜிப்ரால்டர் அணிக்கெதிராக உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டியொன்றில் பங்கேற்றது. இதில் நோர்வேஜிய அணியின் ஒரு செயல் உலகக் கவனம் பெற்றது. அப்போட்டியில் பங்குபெற்ற நோர்வேஜிய வீரர்கள் "மனித உரிமைகள் மைதானத்துக்கு உள்ளேயும் வெளியேயும்" (Human rights - On and off the pitch) என்று குறிக்கப்பட்ட டீ-சேர்ட்டை அணிந்திருந்தார்கள். இதனூடு அவர்கள் சொல்ல முனைந்த செய்தி என்ன?

அவர்கள் ஒரு வலுவான செய்தியைச் சொல்ல முனைந்தார்கள். மனித உரிமைகள் முக்கியமானவை. சமரசத்துக்கு உட்பட்டவை அல்ல. அவை மைதானத்திற்குள் மட்டுமன்றி மைதானத்துக்கு வெளியிலும் பேணப்பட வேண்டும். அவ்வாறு பேணாத ஒரு நாடாக கத்தார் இருக்கிறது. உலகக் கிண்ணத்தை நடாத்தும் நாடு என்ற வகையில் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. இந்தக் கோரிக்கை ஏன் எழுந்தது?

அதன் மூலம் கத்தாரில் நடக்கவிருக்கும் உலகக் கோப்பைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் "உலகின் ஒரே தேசிய அணி" என்று அழைக்கப்பட்டது. இது குறித்து கருத்துரைத்த நோர்வேஜிய உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் சோல்பக்கன் "அரசியலும் விளையாட்டும் எப்பொழுதும் ஒன்றாக இருக்கும், எப்போதும் இருக்கும். நாங்கள் ஏதாவது செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம், எங்கள் செய்தியை முன்வைக்கிறோம், ஆனால் அதை எங்களால் தனியாக செய்ய முடியாது." என்றார். இது நடைபெற்று சில நாட்களில் ஜேர்மன் அணி வீரர்கள் இதே வகைப்பட்ட ஒரு டீசர்டை அணிந்து தங்கள் ஆதரவையும் தோழமையையும் காட்டினார்கள்.

2013ம் ஆண்டு 2022ம் ஆண்டுக்கான உலகக்கிண்ணப் போட்டியை நடாத்தும் வாய்ப்பு கத்தாருக்கு வழங்கப்பட்டது. இந்தத் தெரிவு தொடர்பில் ஏராளமான சர்ச்சைகள் உண்டு. கட்டார் இதைப் பெறுவதற்காக மிகப்பெரியளவில் ஊழலில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டுகள் உண்டு. அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் (FIFA) தலைவர் கட்டாருக்கு வாய்ப்பு வழங்கிய சில மாதங்களின் பின்னர் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இவை குறித்துப் பிறகு வருவோம்.

முதலில் 2013ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டுவரையான 7 ஆண்டுகளில் கட்டாரில் உதைப்பந்தாட்ட மைதானங்களுக்கான கட்டுமானப் பணியில் ஈடுபட்ட 6500 பேர் இறந்துள்ளார்கள் என பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் த கார்டியன் பத்திரிகையின் ஆய்வு தெரிவிக்கின்றது. இவர்கள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இக்காலப்பகுதியில் மரணித்த இலங்கையர்களின் எண்ணிக்கை 557. ஆனால் இது குறித்த எந்தவொரு செய்தியும் இலங்கையில் கவனம்



பெறவில்லை. இதேகாலப்பகுதியில் கிட்டத்தட்ட 15,000 பணியாளர்கள் மரணித்திருக்கலாம் என்றும், பல மரணங்கள் பதிவாவதில்லை என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. மிகவும் குறைவான சம்பளம், மிக அதிகமான வேலை நேரங்கள், மிகமோசமான வெப்பநிலை, வாழவியலாத இருப்பிட கழிப்பிட வசதிகள் என கட்டாரில் பணியாளர்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது என்பதை பல அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இவ்வாறு மரணமடைந்தோரில் 40%த்தினர் 20 தொடக்கம் 40 வயதிற்கு உட்பட்டவர்கள். கத்தாரில் பணியாற்றும் தென்னாசியத் தொழிலாளர்களிடையே பதிவுசெய்யப்பட்ட வெப்பநிலை மற்றும் இருதய நிகழ்வுகளுக்கு இடையே ஒரு வலுவான தொடர்பு இருப்பதாக சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது. ஒஸ்லோ பல்கலைக்கழக மருத்துவமனையின் இருதயவியல் பேராசிரியரும், இவ்வாய்வின் இணை ஆசிரியருமான டாக்டர். டான் அட்டர் இது குறித்துப் பின்வருமாறு தெரிவித்தார்: “இளைஞர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது மிகக் குறைவு. ஆனால் வெப்பமான காலங்களில் மாரடைப்பால் ஏற்படும் இறப்புகளுக்கு கடுமையான வெப்ப அழுத்தத்தின் காரணமாக இருக்கலாம். இந்தத் தொழிலாளர்கள் தங்கள் நாடுகளில் அவர்களின் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தவர்கள். ஆனால் வேலைக்கு அமர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கானோர் கத்தாரில் ஒவ்வொரு ஆண்டும் இறக்கின்றனர்.”

நவீன கொத்தடிமைத்தனம் கட்டாரில் இப்போதும் அரங்கேறுகிறது. இது மத்திய கிழக்குக்குப் பொதுவான நிலைமை. இதன் பின்னணியிலேயே இலங்கையின் அந்நியச் செலாவணியில் பெரும்பகுதி மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையர்கள் மீள அனுப்பும் பணத்தின் வழியே பெறப்படுகிறது என்ற வலிமிகுந்த வெட்கக்கேடான உண்மையை நாம் ஏற்றாக வேண்டும்.

உலகக்கிண்ணம் தொடங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பு கட்டடப் பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் கத்தாரில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டு ஊதியம் இல்லாமல் தாயகம் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது குறித்துப் பேசுவோர் எவரும் இல்லை. இங்கு பணிக்கு வருபவர்கள் பல்வேறு வழிகளில் சுரண்டப்படுகிறார்கள். குறிப்பாக:

- இலங்கை போன்ற நாடுகளில் வறுமை மற்றும் வேலையில்லா திண்டாட்டத்திலிருந்து தப்பிக்க பலர் கத்தாரில் வேலை தேடுகின்றனர். ஆனால் வேலை கிடைக்க அதிக கட்டணம் செலுத்த வேண்டும். நாங்கள் பேசிய தொழிலாளர்களுக்கு 500 முதல் 4,300 அமெரிக்க டாலர்கள் வரையிலான தொகையை அவர்களது சொந்த நாட்டில் உள்ள நேர்மையற்ற ஆட்சேர்ப்பு முகவர்களிடம் செலுத்தினர். பலர் கடனில் உள்ளனர், இதனால் அவர்கள் கத்தாருக்கு வரும்போது வேலையை விட்டு வெளியேற பயப்படுகிறார்கள்.

- தொழிலாளர்கள் பெரும்பாலும் நெருக்கடியான, அழுக்கு மற்றும் பாதுகாப்பற்ற தங்குமிடங்களில் வாழ்கின்றனர். எட்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒரு சிதிலமடைந்த அறையில் தங்குகிறார்கள்.

- அவர்களை பணிக்குச் சேர்க்கும் போது அவர்களது சம்பளம் தொடர்பில் பொய்யுரைக்கப்படுகிறது. அவர்களுக்குச் சொல்லப்பட்ட மாதச்சம்பளத்தில் பாதிகூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

- பலநேரங்களில் மாதக்கணக்காக சம்பள நிலுவை வைக்கப்படுகிறது. இதனால் தொழிலாளர்கள் உணவுப்பொருட்களை வாங்கவியலாமல் பட்டினி கிடக்க நேருகிறது.

- பெரும்பாலானோரது கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்படுவதால், தொழிலாளர்கள் விரும்பினாலும் நாட்டுக்குத் திரும்பிப் போகவியலாது. தொழில்களை மாற்றமுடியாது.

- இவ்வாறான நெருக்கடியால் பலர் அடிமைகளாக நடாத்தப்படுகிறார்கள். 18 மணித்தியாலங்கள் வரைப் பணிபுரிகிறார்கள்.

கத்தாரில் இருந்து உயிரோடு மீண்டுவந்தோரின் பலநூறு கதைகளைக் கேட்கக் கிடைக்கிறது. அந்தக் குரல்களில் தொனிக்கின்ற வலியும் சவப்பெட்டிகளில் மீண்டோரின் குடும்பங்களின் அழுகையும், என்னவென்றே தெரியாத இன்னும் பல நூறுபேரின் உறவுகளின் ஏக்கப்பெருமூச்சும் உதைப்பந்தாட்ட ஆரவாரத்தில் மூழ்கியே போகும். மனித உரிமையாவது மண்ணாவது.

விளையாட்டுக்கள் வணிகமாகி நீண்டகாலமாகி விட்டன. விளையாட்டுக்கள் என்பன இன்று திரைப்படங்கள் போலவும் தொலைக் காட்சிகளில் வருகிற பல வேறு பயனற்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் போலாகி விட்டன. விளையாட்டு வீரர்கள் நடிகர்கள் போலவும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளிற் பங்கேற்கும் பலவேறு பிரபலங்கள் போலவும் ஆகி விட்டனர். அவர்களது அன்றாட வாழ்க்கை பற்றிய அரட்டைகளும் அவர்களுக்குத் தொடர்பில்லாதனவும் அனுபவமும் அறிவும் இல்லாதனவுமான விடயங்களிற் கூட அவர்களது கருத்துக்கள் செய்திகளாகவும் சிறப்புக் கட்டுரைகளாகவும் கருத்துரைகளாகவும் வருகின்றன. ஊடகத் துறையின் சீரழிவு விளையாட்டுத் துறையின் சீரழிவுடன் தன்னை நெருக்கமாகப் பின்னிப் பிணைத்துக் கொண்டு விட்டது.

முதலாளியத்தின் வருகை விளையாட்டுக்களுக்கு ஒரு வணிகப் பெறுமதியையும் வழங்கியது. இதை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் விளையாட்டுக்களைப் புனிதப் படுத்தியதும் ஒரு கிரேக்க பண்பாட்டுச் சின்னமாக உருவானதுமான ஒலிம்பிக் போட்டிகள் மீளுருவாக்கப் பட்டு ஒரு உலக விளையாட்டுப் போட்டியாகிய பின்பு, தேசிய அரசியல் மேலாதிக்க வல்லரசு அரசியல் போட்டிகளின் ஒரு களமாகிக், கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் மிக மோசமான வணிக நோக்குடைய நிகழ்வாகச் சீரழிந்து போயுள்ளதைக் கவனிக்கலாம். இது பிரபலமான சகல விளையாட்டுத் துறைகட்கும் பொருந்தும். உதைப்பந்தாட்டமும் விலக்கல்ல. பிரபல நிறுவனங்கள் அனைத்தும் இந்தப் போட்டிகளுக்கு அனுசரணையாளர்களாக உள்ளனர்.

எனவே அவர்களுக்கும் போட்டிகள் நடந்தாக வேண்டும். மக்கள் பார்த்தாக வேண்டும். ஒளிபரப்பாளர்களுக்கு போட்டிகளை மக்கள் பார்வையிட்டாலே விளம்பரங்களின் வழி கல்லாக் கட்டவியலும். இந்தப் போட்டியைச் சாத்தியமாக்கிய இலட்சோபலட்சம் தொழிலாளர்களின் இரத்தமும் சதையும் பார்வையாளர்கள் விழுங்கும் உணவாகவோ, குளிர்பானமாகவோ உள்ளே இறங்கும். இன்றைய உலகின் மனித உரிமைகளின் யோக்கிதை இதுதான். யார் மீறுகிறார்கள் என்பதே மீறப்படுவது மனித உரிமையா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

உங்கள் ஒவ்வொருவரதும் மனித உரிமைகள் மீதான அக்கறை என்பது உதட்டளவிலா செயலளவிலா என்பதை நீங்களே தீர்மானியுங்கள். நான் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளைப் புறக்கணிக்கிறேன். நீங்கள்?

## மீந்திருக்கின்றன துளிர்ப்புகள்

ஐயப்ப மாதவன் - இந்தியா



மீண்டும் ஒரு பேரலைக்கு
காத்திருக்கிறது மகாசமுத்திரம்
பயந்து நடுங்கும்
துரோகம்
மூழ்கிவிடப் போகிறது
மாபெரும் ஆழத்தில்

தனியொரு அலையில் கடலே நடுநடுங்கிப் போகும்

குருதியில் எழுதிய கவிதைகள்
நீண்டதொரு வாசிப்புக்கு
விழித்திருக்கின்றன

அணைந்த விளக்குகளில்
சூரியன் வந்து திரிகளில் மீது
பற்றி எரியும்

படர்ந்த விரிந்த நிலமெங்கும்
பறிபோன உயிர்களின்
கனவுகளில் இன்னும் துளிர்ப்புகள் மீந்திருக்கின்றன
எம் வனத்தில் நம் பறவைகள்
இன்னும் அடங்கிவிடாத தாகங்களைப்
பாடிக்கொண்டுதானிருக்கின்றன

அழுகிய புத்தனின் பாதங்களின் கீழ்
அச்சங்கள் மறைந்து கிடக்கின்றன
ஒரு பேரலை வரும் காலத்தில்
எல்லைகள் ஒன்றுமிராது

இறந்தது வெறும் நிழல்தான்
நிலவுகள் ஒரு போதும் அழிவதில்லை. 

## அந்த இடம்

-நெடுந்தீவு நேதாமோகன்-



எந்த இடத்தில் ஒருவரை ஏமாற்றி
சென்றீர்களோ
அந்த இடத்தை நினைத்து
பார்த்திருக்கிறீர்களா

எந்த இடத்தில் ஏமாற்றப்பட்டீர்களோ
அந்த இடத்தை மௌனமாக
கடந்து போக முடிந்ததா

அந்த இடம் இன்னும் அப்படியேதான்
இருக்கிறது

அந்த இடம் இன்னும் பல
உறவுகளை உடைத்துப்போட்டிருக்கும்

அந்த இடம் கற்பனையில்
ஒரு சுகந்தம் பரப்புவதாகவும்
நிஜத்தினில் குற்றவுணர்வின்
சரிரமாகவும் இருக்கிறது

எனக்கு அந்த இடம்
வருத்தங்களின் மீதமர்ந்து செல்லும்
வாழ்க்கையைத் தந்தது

கீழே விழுந்த ஒரு சுவைமிகுந்த
ஜெரிப்பழத்தினை
பருமன்நிறைந்த மனிதன் தன் கால்களால்
மிதித்துப்போனதுபோல்
அந்த இடம் அமைந்தது அன்று

எப்போதும் அந்த இடம் என் மனதுமேல்
வந்து ஒட்டிக்கொள்வதில்லை
அந்த இடத்தின் கீழ்த்தான்
என் மனதே இருப்பது போல் இருக்கிறது

எப்போதாகினும் தைரியத்தை
வளர்த்துக்கொண்டு
அந்த மோசமான இடத்தில்
உட்கார வேண்டும் ஓர் நாள். 

# புதிய கொரோனா அலை

18-முதல் 64-வயதுக்குட்பட்டவர்களுக்கு, சாதாரண காச்சல் தடிமன் போன்ற நோய்கள் இல்லாதவர்களுக்கு கொரோனா தடுப்பூசியின் புதிய பூஸ்டர் டோஸ் வழங்கப்பட வேண்டும் என நோர்வே அரசு முடிவு செய்துள்ளது.

கொரோனா தொற்றுநோயைக் கையாள்வதில் தடுப்பூசியே இன்னும் மையமாகவும் முக்கியமாகவும் உள்ளது என்று சுகாதார மற்றும் பராமரிப்பு அமைச்சர் Ingvild Kjerkol தெரிவித்துள்ளார். முன்னர் 64 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், ஆபத்தான கடும் நோய்க்கு உள்ளானவர்களுக்கும் தடுப்பூசி புதிய பூஸ்டர் டோஸ் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது 18வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு புதிய புதுப்பிப்பு ஊசி வழங்குகிறோம். அதிகமான மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதன் மூலம், எதிர்காலத்தில் நோய்த்தொற்று நிலைமை மோசமடைந்தால் அதனை நாங்கள் சிறப்பாக எதிர்கொள்ளலாம். கோவிட்-19 தடுப்பூசிகள் கடுமையான நோய்களுக்கு எதிராக நீண்ட காலத்திற்கு நன்கு பாதுகாக்கின்றன என சுகாதார அமைச்சர் Ingvild Kjerkol தெரிவித்துள்ளார்.

FHI நோர்வே சுகாதார திணைக்களத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அரசாங்கம் இம்முடிவினை எடுத்துள்ளது. தடுப்பூசி சலுகை சுகாதாரப் பணியாளர்களுக்கும் பொருந்தும். தடுப்பூசி சலுகையை ஏற்பாடு செய்வது நகராட்சிகள் தான். எனவே இதற்கான பணிகளை நகராட்சிகள் மேற்கொள்ளும் என FHI சுகாதார மையம் தெரிவிக்கிறது.

அடுத்த சில மாதங்கள் நோயின் ஆதிக்கம் கடினமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒரு புதிய கொரோனா அலை ஒன்று தற்போது நடந்து வருக்கிறது. அதேவேளை Influansa மற்றும் RS வைரஸின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது.

சுவாச நோய் அறிகுறிகள் பல்வேறு நோய்த்தொற்றுகளால் ஏற்படலாம். நீங்கள் உங்கள் அறிகுறிகளை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள். புதிதாக சுவாச நோய்த்தொற்று ஏற்பட்டால் வீட்டிலேயே இருத்தல் நல்லதென FHI சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.




2022 இல் CO2 (காபனீரொக்சைட்) உமிழ்வுகள் வெகுவாக அதிகரித்து உள்ளது.

காபனீரொக்சைட்டின் உமிழ்வைக் குறைப்பதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும், இந்த ஆண்டு CO2 இனது அளவினை நோக்கும்போது உலகில் இதற்கு முன் எப்போதும் இவ்வாறு காபனீரொக்சைட் வாயு அதிகரித்ததில்லை என புதிய சூழல் அறிக்கை தெரிவிக்கிறது.

உலகம் இந்த ஆண்டு 37.5 பில்லியன் தொன் CO2 வெளியிட உள்ளது என குளோபல் கார்பன் (Global Carbon Project) திட்டம் வெளியிடுகிறது.

பாரிஸ் ஒப்பந்தத்தின் படி அனைத்து வாக்குறுதிகளும் இருந்தபோதிலும், புதைபடிவ மூலங்களிலிருந்து உலகளாவிய CO2 உமிழ்வுகள் 2015ம் ஆண்டினை விடவும் 5% சதவீதம் அதிகமாகியுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 1.0 சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த பத்தாண்டுகளின் சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம், அதாவது ஆண்டுக்கு 0.6 சதவீதம் அதிகரிக்கிறது என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.



# மனித குலம் காப்பாற்றப்படுமா...?

– சிவா –

கால நிலை மாற்றம் மகாநாடு எகிப்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
தொழில் புரட்சி ஏற்படத் தொடங்கிய காலத்தில் இருந்து பூமி வெப்பமடைதல் 1,5 degrees Celsius அளவிற்கு அதிகரித்துவிட்டது.
பனிமலைகள் உருகி கடல் மட்டம் உயரத் தொடங்கிவிட்டது.
மாலை தீவு போன்ற தீவுகள் காணாமல் போய் கொண்டிருக்கின்றன. இதற்குள் ஏற்கனவே காணாமல் போன குமரிக் கண்டமும் அடங்குமோ..?
பருவம் மாறிய மழையும், வெயிலும் வெள்ளமும், வறட்சியும் சாதாரணம் என்றாகிவிட்டது.
குறைந்த நேரத்தில் அதிகளவு மழை வீழ்ச்சி நீண்ட காலத்திற்கு மழையற்ற வறட்சி மனித குலம் எதிர்பாராத பருவ நிலை நிகழ்வுகள் நடைபெறுகின்றன.
கரியமில வாயுவின் அளவை கட்டுப்படுத்த முடியாத அதீத ஆலை உற்பத்திகள் பழியை வறிய நாடுகளிடம் போடுவதற்கு ஏற்ப வேலை வாய்ப்புகளை பெற்றுத் தரும் என்பதாக குறைந்த கூலியைப் வழங்கி மூன்றாம் உலகத்து வறிய நாடுகளில் நடைபெறுமாறு பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் பாத்துக் கொள்கின்றன.
கரியமில வாயுவின் உமிழல் எங்கு நடந்தாலும் உமிழ்தலுக்கு பின்னர் அது உமிழ்ந்த இடத்திற்கு மட்டும் சொந்தம் அல்ல. மாறாக அது முழு உலகிற்குமே சொந்தம் என்றாகிய உலக மயமாக்கல் இந்த வாயுவிற்கு.
யாரும் யாரையும் குற்றம் சொன்னாலும் தவறுகள் எங்கு நடந்தாலும் அது முழு உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே உண்மை நிலை.
இவற்றைத் தடுத்து நிறுத்துவதில் கரியமில வாயுவை “நஞ்சுண்ட கண்டன்” சிவனாக எமக்கும் கிடைத்தவைதான் மரங்கள். அவை மனிதனுக்கான நஞ்சை உண்டு அவனுக்கான பிராண வாயுவைக் அளித்திடும் அட்சய பாத்திரங்கள்.
ஆனாலும் மரங்கள் வரையறு அற்று தறிக்கப்படுகின்றன.....
“மரங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன
மனிதர்கள் தம்மை வெட்டிச் சாய்ப்பதை”
மனிதர்களின் மரண ஊர்வலத்தை
என் தோழன் “சுனாமி”யாக கூறுவதையும் இத்துடன் இணைக்கின்றேன்...
“கடல் அமைதியாய் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.
அது கரையை அவதானித்தபடி உள்ளே குமுறிக் கொண்டிருக்கிறது!”
இது வரை நடைபெற்ற கால நிலை மாற்றங்களை தடுத்து நிறுத்துவதற்கான நிவாரணங்கள் வழங்குவது நிதிப் பங்கீடு பற்றி அதிகம் கிலாகிக்கப்படலாம் என்று எதிர்பாரக்கப்படும்.
இம் மகா நாட்டில் இதனை தடுத்து நிறுத்துவதற்கான உருப்படியான திட்டங்கள் ஏதும் வகுக்கப்படுமா என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியவில்லை...
தற்போது மீண்டும் ஒரு தடவை மேலே உள்ள அடைப்பிற்குள் உள்ள வரிகளை வாசித்துப் பாருங்கள்
எம் மூதாதையர் எம்மிடம் பக்குவமாக ஒப்படைத்து விட்டுச் சென்ற இந்த பூமிப் பந்தை நாம் எம் எதிர்காலச் சந்ததியினரிடம் பக்குவமாக ஒப்படைப்பதே எமது தலையாய கடமை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. □



# இங்கர் ஹாகருப்
## Inger Hagerup

12.04.1905 - 06.021985
Bergen, Norway

-பானுபாரதி-

அன்றைய நோர்வேஜிய ஆணாதிக்க சமூகத்தில் தெளிவும் உறுதியும் கொண்ட பெண்ணின் குரலாக ஒலித்தவர் இங்கர் ஹாகருப். நோர்வேயின் பேர்கன் நகரத்தில் 1905ல் பிறந்த இவரது எழுத்துலகப் பிரவேசம் சிறுவர் மலரில் எழுதுவதோடு ஆரம்பிக்கின்றது. அதனைத் தொடர்ந்து கவிதை எழுதுவதில் முனைப்புடன் ஈடுபடுகிறார். அவரது கவிதைகள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரத் தொடங்குகின்றது.

தனது 20வது வயதிலிருந்து நோர்வே பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினராகச் செயல்படுகின்றார். 1939ல் முதலாவது கவிதைத் தொகுப்பு வெளி வருகின்றது. கவிதைகள் மட்டுமல்லாது நாடகங்கள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது சிறுவர் பாடல்கள் மிகவும் பிரபலமானவை.

பெரும்பாலும் மரபுரீதியிலான இவரது கவிதைகள் கடினமான ஆண் பெண் நேசத்தினைப் பேசுவதாகும்.

“பெண்களும் காலமும்” என்ற பத்திரிகையிலும் பணிபுரிந்ததோடு, பொதுவுடமைக் கட்சியின் “விடுதலை” என்கிற பத்திரிகையிலும் விமர்சகராகப் பணி புரிந்தார். இவரது கவிதைகள் இவரது காலத்தய சமூகம் பற்றிய கடும் விமர்சனங்களைக் கொண்டிருந்தன.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அரசியலில் அதிக ஈடுபாட்டுடன் இருந்தார்.

ஒரு சோசலிசவாதியான இங்கர் ஹாகருப் வன்முறையும் அதிகார துஷ்பிரயோகமுமற்ற, எல்லா மனிதர்களும் சமத்துவமாய் வாழ்கின்ற உலகையே விரும்பினார். அனைத்து மக்களினது நலன்களையும் பாரபட்சமின்றிப் பேணுகின்ற ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் அக்கறையுடனும், விழிப்புடனும் செயற்படவேண்டுமென்பதை தனது கவிதைகளில் தொடர்ச்சியாக எழுதி வந்தார்.

1940 ஏப்ரல் 9ம் திகதி நோர்வே நாசிப் படையினரால் முற்றுகையிடப்பட்டது. நாசிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் பங்கேற்றதால் 1943 முதல் சுவீடனில் தலைமறைவு வாழ்வை மேற்கொள்கிறார். ஜேர்மானிய நாசிப்படைகளுக்கெதிராக அவர் எழுதிய கவிதைகள் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

போர்க்காலத்தில் அவர் எழுதிய “Aust vaagoy” (அஉஸ்த் வோகொய்) என்ற கவிதை 1941இல் எழுதப்பட்டது. இவரது வரலாறு பற்றியோ அல்லது இவரது கவிதைகள் பற்றியோ பேச முற்படும்போது இவரது இந்தக் கவிதையை யாரும் எளிதில் கடந்து சென்று விட முடியாது. அந்த வகையில் இந்தக் கவிதை ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இவரது “தொடர்ந்து” என்ற கவிதைத்தொகுப்பில் இடம் பெறும் “Aust vaagoy” கவிதை, நாசிப்படையெடுப்பினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை சென்றடைகின்றது.

2வது உலகப் போரின்போது விடுதலையின் பொருட்டு நோர்வே மக்கள் என்னவெல்லாம் இழக்க நேரிட்டது என்பதும், கணக்கிலடங்கா தமது உறவுகளை இழந்த போதும் எஞ்சியிருந்தவர்கள் எவ்வாறு ஒன்றாக பலமாக எதிர்த்து நின்றனர் என்பதையும் இவர் இந்தக் கவிதையினூடு வெளிக் கொணர்ந்தார்.

நாசிகளின் கெடுபிடி காரணமாக இந்தக் கவிதையை எழுதியவரை வெளிப்படுத்த இயலவில்லை. இந்தக் கவிதை வெளிவந்தபோது பலரும் இது போராளியும் படைப்பாளியுமான அர்னொல்வ் ஒவலாண்ட் என்றே நினைத்திருந்தனர். இங்கர் ஹாகரூப் பிரபல்யமாவதற்கு முன்னரே இவரது கவிதைகள் துண்டுப் பிரசுரமாக மக்களிடையே கொண்டு செல்லப்பட்டன.

இந்தக் காலப் பகுதியில் லண்டனிலிருந்து பிபிசி வழியாக "லண்டன் குரல்" நீண்ட அலைவரிசையில் நோர்வேக்கான ஒலிபரப்பு நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி நோர்வே தேசிய தொலைக்காட்சியின் பணியாளர்களால் நோர்வே அரசாங்கத்தின் செய்திகளுடனும் ஒலிபரப்பப் பட்டது. நாசிகளுக்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு மிகப் பெரிய ஆதரவுக் குரலாக இந்த ஒலிபரப்பு அமைந்தது. லண்டன் குரலில் இந்தக் கவிதையை வாசித்துக் கேட்ட போது இங்கர் ஹாகரூப் மிகவும் அதிர்ச்சி அடைந்தார், ஏனெனில் தனக்கு மிகவும் நெருங்கிய 5 நண்பர்களிடத்தில் மட்டுமே இந்தக் கவிதையை வாசிக்கக் கொடுத்திருந்தார்.

Aust vaagoy வட பகுதியிலுள்ள பல தீவுக் கூட்டங்கள் சேர்ந்த பகுதியில் மிகப் பெரிய தீவுப்பகுதி. பெரும்பான்மையான பிரதேசம் மலைகளால் சூழப்பட்டிருப்பதோடு பரந்த கடற்பரப்பையும் கொண்டதாகும்.

## Aust vågoy



அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்
அவர்கள்
எங்கள் ஆண்களைக் கொன்றனர்
மீண்டும் மீண்டும்
எங்கள் இதயங்களை குமுறியெழச்
செய்வோம்.

எங்கள் இதயங்களை
கொடும் வலி கொண்டு பிளந்து
கொள்வோம்.
அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்.
அவர்கள் அதை இன்றே செய்தனர்.

அவர்கள்
எங்கள் பண்ணைகளை எரித்தனர்.
அவர்கள்
எங்கள் ஆண்களைக் கொன்றனர்
எங்கள்
ஒவ்வொருவரின் மரணத்தின் பின்னே
ஆயிரமாய் திரண்டெழுவோம்.

எல்லாவற்றையும்,
எல்லாவற்றையும் இழந்த போதும்
சளைக்காது
ஆயிரமாய் மலையெனத்
திரண்டெழுவர்.
ஓ........ மரணித்த தோழர்களே...!
அவர்களால்
எம்மை ஒருபோதும்
அடிபணியச் செய்ய முடியாது.

# கவுந்து படுத்ததெங்கள் வாழ்க்கை கரையில....

எமது பாரம்பரியக் கலைகளான கூத்து, அம்பா, களரி ஆட்டம், கண்ணகை சதிர், கும்மி, கோலாட்டம் இப்படி ஒவ்வொரு நிலப் பண்பாட்டுக்குமான நூற்றுக்கணக்கான கலை வடிவங்கள் கடந்த காலங்களில் எம்மிடையே இருந்து வந்திருக்கின்றன. இவைதான் எமது அடையாளங்கள். இவைதான் எமது முகவரிகள். இவைதான் எமது வாழ்தலின் இனிமைகள், அர்த்தங்கள், ஆவணங்கள்.

இந்தக் கலை வடிவங்கள் மக்களால் உருவேற்றப்பட்டு, மக்களுக்காகப் படைக்கப் பட்ட வடிவங்களாகும்.
இன்றுள்ள வியாபாரத்தை முன்நிறுத்தி முனைப்பெடுத்து பட்டிதொட்டி, மூலை முடுக்குகளெல்லாம் பரவிவரும் ஜனரஞ்சகக் கலை வடிவங்களானவை எமது மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கான எந்தவித பலாபலன்களையும் எமக்குத் தராதவை என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மிக முக்கியமாக தற்கால சினிமா உட்பட.

இனிவரப்போகும் காலங்கள் உலகையே அச்சுறுத்தும் உணவுப் பஞ்சக் காலங்கள் என்பதை உலகே அறியும்.
எமது தேசத்தைப் பொறுத்தவரை உலகம் எதிர்கொள்ளவிருக்கும் உணவுப் பஞ்சக் காலத்தை எமது நாட்டு மக்கள் எதிர்கொள்ளவும், பஞ்சத்தைப் பெருமளவில் போக்கவும் இருக்கின்ற மிகப்பெரும் ஆதாரம் எமக்கிருக்கும் கடல் வளங்கள்தான்.

இதனை நாம் உணர்ந்து கொள்வதற்குமுன்பே எமது அண்டை நாடுகளும், உலக நாடுகளும் உணர்ந்துகொண்டு, எமது கடல் வளங்களைக் கையகப் படுத்துவதற்கான சாணக்கியத் திட்டங்களை வகுத்து செயற் படுகிறன.
அவற்றின் ஒருபகுதி செயற்பாடுகளே இன்று எமது கடற்பிரதேசங்களுக்கு ஒவ்வாத பண்ணைவேலித் திட்டங்களாகும். இது எமது இயற்கை வளங்களை இல்லாமற் செய்வது மட்டுமல்லாது, இந்த பன்னாட்டு முதலாளிகளின் விரலிடுக்குகளால் சிந்துண்டுபோகும் பருக்கைகளைப் பொறுக்கிச் சாப்பிடும் ஈனப் பிறவிகளாக நாம் ஆக்கப் படுவோம்.

பன்னாட்டு முதலாளிகளின் தரகர்களாக இயங்குபவர்கள் வேறு யாருமல்ல, எமது மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கும் அதிகாரிகளும், நாம் வாக்களித்துத் தேர்வு செய்த அரசியல்வாதிகளும்தான்.
எமது மக்களின் இரத்தத்தையும் வியர்வையையும் வரியாகச் செலுத்தி, அந்த வரிப்பணத்தில் ஊதியம் வாங்கும் இந்த அரச அடிமைகள்தான் எம்மை அடிமைகளாக பன்னாட்டு முதலாளிகளுக்கு விற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விழிப்புணர்வின் பன்முக செயற்பாடுகளில் ஒன்றாக "நெய்தல் பத்து" என்ற நெய்தற் காட்சிகள் அடங்கிய பாடற் தொகுப்பை நமது இளம் சந்ததிகளுக்காக படைத்து முன்வைக்க முயற்சிக்கின்றோம்.

இந்தப் படைப்புக்களின் தயாரிப்பை **தேன் தமிழோசை வானொலி, தேன் தமிழிதழ் பத்திரிகை** முன்னெடுக்கின்றது.

அதில் ஒரு பாடல்தான் மன்னார் கரைவலைத் தொழிலின்போது மீனவர்களால் பாடப்படும் அம்பா.
அதில் ஒன்றை நமது இளம் தலைமுறையினருக்கான முறையில் இசையமைத்து வெளியிடுகின்றோம்.

**கே.சுந்தர் Oslo (குட்டிமாஸ்ரர்) இசையில்**
**மன்னார் அம்பா பாடல்**
**பாடல் வடிவம்: தமயந்தி**

வாடி ஆத்தா வளவுக்குள்ள
வண்ணம் போட்ட திண்ணைக்குள்ள
ஓடியாடி இழுக்கச் சொல்லி
உலமா கையக் காட்டுறாண்டி

கொக்கா நல்ல குமரியல்லோ
உங்க அத்தானும் நானல்லோடா
பாத்துமுத்தே பரிமளமே
நேத்துரைச்ச சந்தணமே

கரைவலை இழுத்தோம் களங்கண்டி இழுத்தோம்
விடுவலை இழுத்தோம் வத்துக்கண்டி இழுத்தோம்
எதைப் பிடித்திழுத்தும் எதுகும் வரயில்லை
எதைக் கொண்டு அடித்தும் கஞ்சிக்கும் வழியில்ல
கொட்டுவலை அடித்தோம் அடிவலை அடித்தோம்
வழிவலை படுத்தோம் நண்டுவலை படுத்தோம்.
அடியன் அடித்தும் எங்க வயிறு நனையேல்ல
கவுந்து படுத்ததெங்க வாழ்க்க கரையில

கடலில கை நிறைய அவகட பை நிறய
எக்கச் சக்கமாக அறுவட செய்யப்
போறதெண்டு சொல்லி
கண்ட நிண்ட இரும்புக் குண்டுகள மடியில
கட்டியெல்லோ கடலின்ர பெத்த மடி கிழிச்சு
அனியாயஞ் செய்யினமே
ஆரட்டப் போயிதச் சொல்லியழப் போறோம்

போதாத குறைக்கு தொப்புழ்க்கொடி எண்டு
பனமரம் ஏறி வவ்வால் சுட்ட தமிழன்
ஈவிரக்கம் இல்லாமல் குஞ்சு குருமானயெல்லாம்
வழிச்சுத் துடைக்கிறான் கடன் பட்ட வலையெல்லாம்
அறுத்துத் துலைக்கிறான்.

என்னெண்டு கேட்டால் தாம் கடல் மக்களாம்
தங்களுக்கும் உரிம இருக்கெண்டு சொல்லுறான்
அண்ணமாரே எவனாதல்
பெத்துப்போட்ட ஆத்தாளின்ர
கருப்பையக் கிழிச்சு
வித்து சுட்டு தின்பானோ

கோடி நல்ல குலவயிலே
கோளாறு வந்த தென்ன
முக்காட்ட நீக்கடியே
முகத்தழகப் பாக்கணுமே

கல்லடுக்கிப் பறி வைதத்து கட்டையில கூடு வைத்து
அட்டை சங்கு முத்து என ஆழிக்கடல் முக்குளித்து
கட்டாவலை தூண்டிவலை சீலாவலை ஓலைவலை
காட்டுமதி பார்த்து ஈச்சங்கூடு இறக்கி
குஞ்சு குருமானுக்கும் கஞ்சியில்லாச் சீவியம்
ஈடு வைத்த எதையும் மீட்டெடுக்க நாதியற்று
குடி கெட்டுப் போச்சே கூடு செத்துப் போச்சே
கடல் செத்துப் போச்சே
செய்வினையோ சூனியமோ

வாடி ஆத்தா வளவுக்குள்ள
வண்ணம் போட்ட திண்ணைக்குள்ள
ஓடியாடி இழுக்கச் சொல்லி
உலமா கையக் காட்டுறாண்டி

*-தமயந்தி-*




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist,
Oslo, Norway)

**புதிய ஒமிக்ரோன் திரிபு வைரஸ் BF.7 மக்கள் மத்தியில் பரவுவதாக செய்திகள் வருகின்றன. இந்த வைரஸ் எப்படியானது? அதிகம் தாக்குமா?**

பெருந்தொற்றின் தீவிரம் தணிந்தாலும் கொரோனா வைரசின் பிரழ்வடைந்த வடிவங்களில் அந்த வைரசு நீடிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயம்.
அந்தவகையிலே இப்போது BF.7, BF.5 திரிபடைந்த வைரசுக்கள் பரவிவருவதை அவதானிக்கலாம். இன்றுவரை தொடர்ச்சியாக கொரோனா பரவிவருகின்ற போதும் ஆரம்பத்தில் தடுப்பூசிகள் கிடைப்பதற்கு முன்பு பரவியது போல் உக்கிரமாகப் பரவுவதில்லை, அத்துடன் தொற்றுக்குள்ளானவர்கள் முன்பு போல் தீவிரமாகப் பாதிக்கப்படுவதுமில்லை. இன்னும் சொல்லப்போனால் கோரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என பரிசோதிப்பதையே பலர் கைவிட்டுவிட்டார்கள்.

**நாம் போட்டுக்கொண்ட தடுப்பூசிகள் இந்த வைரசிலிருந்து பாதுகாக்குமா?**

கொரோனா பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும், அதன் உக்கிரத்தைக் குறைப்பதற்கும், உலகமக்களினுடைய வாழ்வு ஓரளவு இயல்புநிலைக்கு திரும்பியதற்கும் தடுப்பூசிகளின் பங்கு இன்றியமையாமல் இருந்துவருகின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. உலகில் அதிகளவான மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட நாடுகளில் ஒன்றான நோர்வேயில் வாழுகின்றோம். இங்கு 18 வயதிற்கு மேற்பட்டவர்களில் 89 வீதமானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும், 80 வயதிற்கு மேற்பட்டவர்களில் 92 வீதமானவர்கள் மூன்று தடுப்பூசிகளையும், 67 வீதமானவர்கள் நான்கு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே இங்கு பரவும் வேகமும், தீவிரமும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு தடுப்பூசிகளே காரணமென நம்பலாம். ஆயினும் எவருக்கு எப்போது பரவுகிறதென எவராலும் எதிர்வு கூறமுடியாமல் இருப்பதனால் தொடர்ந்தும் அடிப்படை சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றது.

**நான் 3 தடவைகள் கொரோனா தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசி போட்டுள்ளேன். அண்மையில் எனக்கு கொரோனாவும் வந்தது. நான்காவது ஊசியும் போடவேண்டுமா?**

ஏற்கனவே பல்வேறு உபாதைகளால் பாதிக்கப்பட்டு உடலில் எதிர்ப்புச்சக்தி குறைந்தவர்களை நான்காவது தடுப்பூசியையும் போடுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. உங்களுக்கு அண்மையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால் நீங்கள் உடனடியாக நான்காவது தடுப்பூசியை போடத்தேவையில்லை. உங்கள் வைத்தியருடன் ஆலோசித்து உகந்த காலத்தில் நான்காவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வது நலம்.

# தாவீதுத்திறவு

-தமயந்தி.

தொடர்- பாகம் 5



இதைச் சொல்லி முடிப்பதற்குள் அண்ணாவியார் அடக்கமாட்டாமல் பெருங்குரலெடுத்துச் சிரித்தார்.

நான் கண்ட அன்றையகால மேடையில் எதிரியான துருக்கி மன்னனைப் பார்த்து அந்தக் கூத்துக்களரியே அதிரும்படியாக எம்பரதோர் ராசாவாக இவர் பெருங்குரலெடுத்து ஏளனமாய்ச் சிரித்த சிரிப்பொலியை இப்போ மீண்டும் காணக் கண்டேன் என்பதுதான் உண்மை.

“இதத்தான் தம்பி மந்தபுத்திக்காறர், ஒரு விளப்பங்கிளப்பம் இல்லாத ஆக்கள் எண்டு சொல்லுறது. புத்தி அவ்வளவும் பாழ்சாணம். அதுசரி தம்பி தெரியாமத்தான் கேக்கிறன், மரபுகளக் காமேந்து பண்ண வேணுமெண்டு சொல்லுகினம், பிறகு அண்ணாவிமரப அடியோட அழிக்கவேணுமெண்டுஞ் சொல்லுகினம். அப்ப இவயளின்ர தொன்மயும் மரபும் எதுதானப்பன்? இவயள் வேறயென்னத்தையோபற்றிக் கதைக்கினம்போல..... அண்ணாவியெண்டால் என்னண்டு நினச்சுக் கொண்டினம்.... ம்...? கூத்துச் சொல்லிக்குடுக்கிற ஆள் மட்டுமெண்டா...? அவன் தன்ர சனத்தின்ர அடயாளம் தம்பி. விலாசம் தம்பி. அண்ணாவி கூத்தையெழுதிப் பழக்கி, சோடின ஏத்திறதோட மட்டுமா இருப்பான்...? ஒரு கூத்துக்குத் தேள்வயான அடியந்தல மட்டுமா அவனுக்குத் தெரியும்.... ம்? ஓலச்சுவடியிலயிருந்து தேவாரம் விருத்தங்கள மட்டுமா அவன் படிச்சு வச்சிருப்பான்? வயித்தியம் படிச்சுவச்சிருப்பான், விசக்கடிக்கு மருந்து தெரிஞ்சு வச்சிருப்பான், அமுதமெது பாழ்சாணமெதெண்டு பகுத்திருப்பான், தன்ர சனத்த எப்பிடிக் காவல் காத்துக் காமேந்து பண்ணவேணும் எண்டு படிச்சிருப்பான், கிரகபூகோளங்களயும், சமுத்திரங்களயும் அறிஞ்சு வச்சிருப்பான், நீதிஞாயபரிபாலனத்தப் படிச்சிருப்பான்.... ம், அண்ணாவி எண்டிறது இவயள் நினைக்கிறமாதிரிப் பட்டப்படிப்பில்ல ராசா.... அது மனுமாஞ்சாதி சீவியச்சித்தாந்தம். சும்மா எடுத்தங்கவிழ்த்தமெண்டு வாயில வாற பொல்லாப்பு நரகலுகளக் கதைக்கப்படாது.....”

ஒரு இடிமுழக்கம் எனது முகத்துக்கு அருகாமையால் கடந்து போனதுபோல் நினைத்திருக்க, விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கினார் தாவீதுத்திறவு அண்ணாவியார்.

“இந்த அண்ணாவியள ஒரு பட்டிக்குள்ள கட்டிமேய்க்கேலாமல்க் கிடக்கெண்டு விசனங் கொள்ளுகினம் தம்பி.... அதச் சொல்லுறதுக்குமுந்தி இந்த அண்ணாவிமார் ஆரெவர், போக்கென்ன நோக்கென்ன, ஊரென்ன உழவாரமென்ன எண்டதத் தறளியா அறிஞ்சுபோட்டு வந்து கால் வைக்கவேணும் ராசா. ஏனவ்வளவு தூரம் போறியள், இந்தச் சுத்துவட்டாரத்திலயே பத்துப் பதினஞ்சு கிராமங்கள் பக்கத்துப் பக்கத்திலயே இருக்குது அப்பன். ஒவ்வொரு கிராமத்தில இருக்கிற கூத்தும், கிட்டத்தட்ட ஒண்டுமாதிரித் தெரிஞ்சாலும் ஒவ்வொண்டும் பாட்டு ஆட்ட முறையள், பக்கவாத்தியங்கள், பிற்பாட்டுமுறயள் எண்டு பலதும் பத்தும் வேறவேறயாத்தான் இருக்கும். இதெல்லாம் ஏன் வந்தது, எப்பிடி வந்தது எண்ட காரணகாரியம், பட்டறிவு இந்தாக்களுக்கு வேணும் தம்பி. தங்கட தங்கட கூத்துத்தான் திறம் எண்டு ஒவ்வொரு ஊர்க்காறரும் சொல்லுவினந்தான் தம்பி. இத உலகத்தில ஆருதான் சொல்லமாட்டினம்? இதக்கூட விளங்கிக்கொள்ளாமல் சண்ட பிடிக்கினம், ஒருபட்டியில அடைக்கேலாமல்க் கிடக்கு, அண்ணாவிமாரக் கட்டிவச்சுத் தோலிரிக்கவேணும்

எண்டு சொல்லுறதெல்லாம் அரப்பதப் புத்தியிலயிருந்து வாறதப்பன். இன்னுஞ் சொல்லப்போனா இது கெட்ட நஞ்சுப்புத்தி ராசா. இந்தக் கதகாரியங்களயெல்லாம் போய் உத்தமமெண்டு நினைக்காதேங்கோ"

அண்ணாவியார் ஒரு பிரசங்கியார்போல, அதிலும் சீற்றம் கொண்ட பிரசங்கியாராகக் காணப்பட்டார். மூப்படைந்த நிலையிலிருக்கும் இவரை உணர்ச்சிவசப்படுத்தி, இரத்தக் கொதிப்பை ஏற்படுத்தி விட்டேனோ என்றும் அச்சமாக இருந்தது.

அண்ணாவி தாவீதுத் திறவாருடனான இந்தச் சந்திப்பை இத்தோடு நிறுத்திக்கொண்டு, மிக விரைவில் இன்னும் ஒன்றோ இரண்டு முழு நாட்களை அண்ணாவியாருடனேயே கடந்து செல்லத் திட்டமிட்டுக் கொண்டேன்.

"சரி ஐயா, நாங்க கட்டாயம் இன்னொருநாள் முழுக்கமுழுக்க இருந்து கதைப்பம்..... "

"இருங்க தம்பி, சமயல் முடிஞ்சிருக்கும் சாப்பிட்டுப் போகலாம். நல்ல கருங்கண்ணித் தலக்கறி தம்பி. வீடுதேடி வந்தனீங்க கை நனைக்காமல்ப் போகேலாது, இஞ்சேருமப்பா.... தம்பி வெளிக்கிடப் போறாராம் சுறுக்கெண்டு பாரும்"

"கட்டாயம் ஐயா, நான் உங்களோடயிருந்து சாப்பிட்டுப் போறன்"

நாளை பேசாலை, தலைமன்னார் பயணிப்பதான திட்டம். நண்பர்கள் உதயசூரியன், தேவபாலன், சத்தியநாதன் ஆகியோரை தலைமன்னாரில் சந்தித்து ஒரு வாரம் அங்குள்ள கூத்துக் கலைஞர்களுடன் உரையாடுவதான ஒரு ஏற்பாடு அது.

அண்ணாவியார் வீட்டுப் பனைமட்டை வேலியில் இப்போ அந்த தாவீது ஓணான் ஒரு பக்கமாகவும், இரண்டு கோலியாத்து ஓணான்கள் எதிர்ப் பக்கமாகவும், போர்நிலை எடுத்து நின்றன.

தொடரும்.....

# பின்நவீனத்துவம்

**நோர்வேஜியக் கவிதை - Helge Vatsend**
**தமிழில்: பானுபாரதி**

உலகம் கவிதைகளால்
எழுதி முடிக்கப்பட்டு விட்டது
எல்லாவிதமான உத்திகளும்
கையாளப்பட்டு விட்டன.
இளவேனிற்காலத்தின்
துளிர்த்தெழும் புல்வெளிகள்
சூரிய உதயம், புரட்சிகள்,
ஒப்பனை செய்யப்பட்ட வார்த்தைகள்
புதிய எளிமையான சரணங்கள்


இந்த பூமியில்
எமது
கடின உழைப்பினால் சேகரிக்கப்பட்ட,
வாழ்தலைப் பற்றிய அறிவினை
நாங்கள் பற்றியுள்ளோம்.
கலப்படமற்ற உண்மைகள்
இயற்கையின் விதிகள்
நிதர்சனமான அழகு
இறந்து கொண்டிருக்கும் காடுகள்
சந்தையின் கூக்குரல்கள்
முரண்பாடுகள்

எங்களது அனுமானங்கள்
காலைப்பொழுதின் கலைக்களஞ்சியங்கள்
உயிர் தப்பி வாழும் கலையை
கற்றுக் கொடுக்கும் கவிதைகள்
பெருந்தொழிற்சாலையின் அனுசரணையுடன்
தயாரிக்கப்பட்ட
முடிவற்றுத் தொடரும் முன்னேற்றம் பற்றிய
காணொளி
காலவோட்டத்தின் சிதைவில்
கனவாக உருமாற்றப்பட்ட உண்மைகள்
காலநிலைச் சிதைவுகள்
அமைதி

காற்றில்
கையகப்பட்ட காட்சி
கணப்பொழுதில் கடந்து போய்விடுகின்றது.
கடந்து, எல்லாமும் பின் தள்ளப்பட்டு விட்டன
உலகம் கவிதைகளால்
எழுதி முடிக்கப்பட்டு விட்டது
அழிவு மட்டுமே எஞ்சியுள்ளது. □

குறிப்பு:1

## FIFA - வர்த்தகக் களத்தில் No-1 பாக்கிஸ்தான்



FIFA உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளில் பயன்படுத்தப்படும் 70%மான பொருட்கள் பாகிஸ்தான் சியால்கோட் நகரில் தயாரானவை என்று Bloomberg வணிக ஆய்வுச்சேவை கூறுகிறது. இதில் அடிடாஸ் பாகிஸ்தான் நிறுவனம் தயாரித்த அல் ரிஹ்லா என்று அழைக்கப்படும் பந்து மிகவும் முக்கியமானது. மிகவும் மேம்பட்ட Vibration sensor கொண்டு VAR தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுத்து காற்றில் பறக்கும் அல் ரிஹ்லா பந்து ஒரு தொழில்நுட்ப உச்சகட்ட தயாரிப்பு. அரபு மொழியில் “அல் ரிஹ்லா” என்றால் பயணம் என்று அர்த்தம். பாகிஸ்தான் சியால்கோட் நகரம் உலகில் விளையாட்டு உபகரணங்கள் தயாரிக்கும் பாரிய வணிக மையம். ஏறத்தாழ 1000 விளையாட்டு உபகரணங்கள் தொழிற்சாலைகளில் ஏறத்தாழ 60,000 பேர் நிரந்தரமாக பணியாற்றுகின்றனர். கிரிக்கெட் பந்து மற்றும் பெட் ஏனைய விளையாட்டு உபகரணங்கள் தயாரிப்பிலும் உலகின் முதலாம் இடத்தை சியால்கோட் நகரம் தக்கவைத்துள்ளமை ஆச்சரியம் தருகிறது.

படம் -அல் ரிஹ்லா பந்தை தைக்க ஆரம்பிக்கும் சியால்கோட் மாது. □

குறிப்பு:2

### வரலாற்று முதுசம்



இலங்கையில் மிகவும் உயர்ந்த ரயில்வே நிலையத்தில் (1894) நிலையத்தில் உள்ள இந்த சிக்னலிங் சிஸ்டம் 150 வருடங்கள் பழமையானது இன்றுவரை எந்தவிதமான பிரச்சனையும் இல்லாமல் இயங்குகிறது.

Tyler’s Patent Train Tablet Apparatus, London என்று பதிக்கப்பட்ட இந்தப் பொறி எளிய தர்க்கப்படலை (logic gate) தத்துவத்தை கொண்டு செயற்படுகிறது.

Tyer’s Electric Train Tablet system பிரித்தானிய பொறியாளர் Edward Tyer அவர்களால் 1874 இடம்பெற்ற 21 உயிர்களை காவு கொண்ட நோர்போ.்.ல்க், தோர்ப் ரயில்வே விபத்தின் பின்னர் அவ்வாறான விபத்துகளை தவிர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

இங்கிலாந்து, நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் இலங்கையில் இருந்த தனிவழித்தடங்களில் இது உபயோகிக்கப்பட்டது. இங்கிலாந்து ஜப்பான் முழுவதும் மின்சார ரயில்வே வந்த பின்னர் இது கைவிடப்பட்டது. கடைசியாக நியூசிலாந்து 1994 வரை இதைப் பயன்படுத்திவந்தது.

தற்போதைய நிலையில் இலங்கையில் மட்டுமே இந்த வரலாற்று முதுசம் புழக்கத்தில் உள்ளது. □

குறிப்பு:3

## திணைக்களங்களில் தூசி படியும் அபிவிருத்தித் திட்டங்கள்




Orange நிறுவனம் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறும் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு பெற்றது. Orange Electrical Company இலங்கையில் முதலாவது diversified endemic consumer electronics company யாக அதாவது LG, Samsung, Huawei, Sony போன்ற நிறுவனமாக தேசத்தால் வளர்த்து எடுக்கப்பட வேண்டிய குழந்தை. ஆனால் இரண்டு வருடங்களுக்குமுன்னர் 150பேருக்கு தொழில் வழங்கும் இந்த தொழிற்சாலை அமைக்க Orange நிறுவனம் அனுமதி கோரிய விண்ணப்பம் இன்னும் ஏதோவொரு திணைக்களத்தில், யாரோ ஒரு-வரின் மேசையில் ஒரு கையொப்பத்திற்கு இன்னும் காத்து கிடக்கிறது. விரக்தி மனநிலையில் Orange நிறுவனம் இந்தியாவில் மும்பை நகருக்கு சென்று அதே தொழிற்சாலையை அமைக்க அனுமதி கோரியது. இரண்டு வாரங்களில் அனுமதி வழங்கப்பட்டு தொழிற்சாலை modular முறையில் விரைவில் நிர்மாணித்து இன்று அது தனது உற்பத்தியை தொடங்கியது.

ஒரு கதையாக கூறின், அந்த நாட்டின் அனைத்து கம்யூட்டர்களும் இன்னும் MS-DOS operating system மூலம் இயங்கிக் கொண்டிருந்தது. அனைவரும் MS-DOS இன் பெருமை பேசி திரிவார்கள். அதை தங்கள் பாரம்பரிய மரபின் மாற்ற முடியாத கூறாக கருதினார்கள். அதே பழைய ஹாட்வெயார் அதே புராதன software காம்பினேஷன் அவர்களை ஏனைய நாடுகளை விட பல தசாப்தங்களாக பின்னால் வைத்திருந்தது தெரிந்தும் அவர்கள் அதைப்பற்றி அலட்டவில்லை. நாம் ஒரு தீவு நமக்கு எது பிரச்சனை என்று Coelenterata நரம்புத் திரட்டுகளின் மெதுமை Sloth Bear இன் இலாவகமான பதுமை அந்த தீவில் மட்டுமே உள்ள புதுமையுடன் காலம் கழிந்தது. ஒரு கோப்பு அலுவலகத்தில் அடுத்த மேசைக்கு நகர்வதற்கு இடையில் சந்திரனுக்கு போய் வந்து விடலாம். இரண்டு ஒப்பந்தங்களின் பின்னர் கிடைக்க வேண்டிய அனுமதி இருநூறு ஒப்பந்தங்களின், ஒப்பனைகளின் பின்னர் கிடைக்கும்.

இலங்கையின் முக்கியமான பிரச்சனை உலகத்தோடு ஒத்து நாம் நம்மை அப்டேட் செய்வதில்லை. உலகம் மிகவும் விரைவாக மாறுகிறது அதன் வேகம் எங்களுக்கு புரிவதேயில்லை. Very simple example உலகின் பெருநகரங்கள் ஆகட்டும் கிராமங்கள் ஆகட்டும் கடந்த மூன்று ஆண்டுகளாக அனேகமானவர்கள் பேப்பர் கரண்ஸியை தொட்டதே இல்லை அனைத்து Google play, Apple pay, Ali pay, Paytm, PayPal, WeChat என்று mobile payment platform இல் தான் நிகழ்கிறது. ATM இயந்திரங்கள் பல மூடப்படுகின்றன. Digital currency exchange உலகின் மிகவும் பெரிய அளவில் வளர்ந்து விட்டது. இங்கே இன்னும் இதுவரை இது பிரபலமாகவில்லை ATM களில் இன்னும் கூட்டம் அலைமோதுகிறது. உண்மையில் நாம் செய்வது Windows 11 யுகத்தில் MS-DOS மென்பொருளை uninstall செய்ய மறுப்பது போல ஒரு வேலை. □

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்

பாகம்-13



**ப்ரியமதா பயஸ்**

போருக்குள் வாழ்ந்த மக்கள் இப்போது வெளியே வந்ததும், போர் ஆயுதங்களின் உறுமல் இல்லாத, சாவை கையில் பிடித்துக்கொண்டு ஓடத்தேவை இல்லாத வாழ்க்கையை வாழ்வதிலும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்தான், இத்தனைக்குள்ளும் கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை சொல்லி மாளாதுதான், அண்மையில் வள்ளிபுனம் பகுதியில் இயங்கும் ஒரு அறக்கட்டளை நிலையத்துக்கு போகும் சந்தர்ப்பம் கிடைத்தது, நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள், இருபதுக்கும் மேற்பட்ட வயோதிபப்பெண்கள் என பலரை அந்த நிறுவனத்தில் காணமுடிந்தது.

அந்த நிறுவனத்தில் மாலை நேர கல்விக்காக வரும் 75 பிள்ளைகளும் குடும்பத்தில் யாரோ ஒருவரை இழந்தவர்களாகவே இருந்தனர். பெரும்பாலும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் படிக்கும் பிள்ளைகளே ஏராளமாக அங்கே கல்விபயில வந்திருந்தனர்.

அவர்களிலும் அதிகமான பெண் பிள்ளைகள் இருப்பது மனம் வருந்தும் விடயமாக இருந்தது, பெண் தலைமைக்குடும்பங்களின் வாழ்க்கை மிக நெருக்கடியானது அதிலும் அந்த குடும்பத்தில் இருக்கும் பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் இருந்தால் அதுவே இன்னும் நெருக்கடியான ஆயிரம் வசைச் சொற்கள், தாயை தனியே பெண் பிள்ளைகளை தனியே என வசைபாட ஒரு கூட்டம் எப்போதும் இருக்கும் என்பதையும் அன்று கண்கூடாக கண்டேன்.

அத்தனை பெண் பிள்ளைகளோடும் ஆசுவாசமாக பேசக்கிடைத்தது, அப்பா என்ன செய்கிறார்? அம்மா என்ன செய்கிறார்? நீங்கள் எத்தனைபேர்? என்பதாகவே என் கேள்விகள் எழுந்தன அம்மா மட்டும்தான் அப்பா இல்லை என்கின்ற அநேகமான பதில் என்னை நோகடித்தது, போராலும் போருக்கு பின்னரான சமூக சீரழிவுகளாலும் வீட்டில் குடும்பத்தலைவன் இல்லாமலோ அல்லது இருந்தும் இல்லாமலோ வாழும் சூழலில் ஒரு போர் திணற பூமி இருப்பது மிகுந்த வேதனையை தந்தது.

அவ்வப்போது வெளிநாடுகளில் இருந்து தமிழ் உறவுகள் வழங்கும் உதவிகளுக்காகவும் கல்விக்காகவும் இப்படியான அறக்கட்டளை நிறுவனங்களை நாடும் பிள்ளைகளை பார்க்கும்போது மனசு தவித்து போகிறது.

போரும் வறுமையும் என்ற ஒரே காரணத்துக்காக நிர்கதியாகிப் போன நம் உறவுகளை பார்க்க மனம் வெந்து நொந்தது, போருக்கும், போருக்கு பின்னரும் பெண் தலைமை குடும்பங்கள் பெருகுவது ஒரு துரதிஷ்ட்டமான சூழல் என்பதை புரிந்துகொள்ள நீண்ட நேரம் எடுக்கவில்லை.

ஆனாலும் அங்கே பராமரிக்கப்படும் 20 க்கும் மேற்பட்ட வயோதிப பெண்கள் (ஒரு சிறு கிராமத்தில் மட்டும்) யாருமற்றவர்களாக இருக்கிறோம் என கண்ணீர் சிந்தும்போது மனிதர்களையே சபிக்க தோன்றியது.

நாம் காலையில் வருவோம் இங்கே காய்கறிகள், அரிசி என்பவற்றை கொடுப்பார்கள் நாம் எல்லோரும் சேர்ந்து சமைத்துச் சாப்பிட்டு விட்டு எங்களுக்கு என்று இருக்கும் வீடுகளுக்கு சென்றுவிடுவோம் பின்னர் மீண்டும் அடுத்தநாள் காலையில் இங்கே வருவோம், எங்களுக்கு

யாரும் இல்லை எல்லோரையும் சண்டையில் பறிகொடுத்துவிட்டோம் என்று கண்ணீரோடு பதில் தருகின்றனர்.

அப்படியா என்று கொஞ்சம் விளக்கமாக வினவினால் அனைத்து பெண்களின் கணவன்மாரும் போரில் இறந்து, காணாமல் போனவர்களாகவே இருக்கின்றனர்.



அவர்களின் மனநிலை கூட மாறிப்போய் மிகவும் நொந்துபோய் தம் கதையை கூற தொடங்குகின்றனர். ஆளாளுக்கு முந்தியடித்து தன் கதையைத்தான் கேட்கவேண்டும் என அவர்கள் தவிப்பதிலிருந்து, அவர்கள் யாருமற்று ஆதரவற்று தவிக்கின்றனர் என்பது புரிந்துகொள்ள முடிந்தது.



தனியே வயிற்றுக்கு சோறுமட்டும் போதுமா அம்மா அன்பாய் பேச நம் துன்பங்களை சொல்ல ஆறுதலாக பேச உங்களைப்போல யாரும் நமக்கு இல்லை என்கின்ற வார்த்தை மிக வலியை தந்தது.

சரி கொஞ்சநேரம் பேசலாம் என்கின்ற எமது அவசரம், கொஞ்சநேரம் இரு பிள்ளை என்கின்ற அவர்களது ஏக்கம், தற்போதைய வாழ்வியலை முன் கொண்டு வந்து விட்டது, எல்லோருக்கும் இந்த அவசர யுகத்தில் அலைமோதவே நேரம் போதவில்லை இப்படி தனிமையில் வாழும் அன்னையர்க்கும் பெண்களுக்கும் யார் ஆறுதல்? நாமோ இன்னும் ஒரு இடத்துக்கு அவசர பயணம் செய்ய ஆயத்தமாக இருக்கிறோம் தங்கள் துன்பக்கதையை கேட்க யாரும் இல்லை என தவிக்கும் பெண்களின் மனநிலை எமக்கு குற்ற உணர்வை உண்டுபண்ணியது.



இப்போதைய காலத்தில் இப்படியான பெண்களின் உளவியலில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவையை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன். அவர்களின் துன்பங்களை ஆவலாக நாம் கேட்கும் தருணத்தில் அவர்களின் மனப்பாரம் குறைகிறது, கொஞ்சம் இலேசாக முகம் மாறுகிறது, பற்கள் கொஞ்சம் வெளியே தெரிய சாதுவாக புன்னகைக்கிறார்கள். அவர்களின் மனப்பாரத்தை குறைக்க எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு இந்த சமூகம் தன் பங்களிப்பை வழங்கவேண்டும் சரியான உளவியல் பயிற்சிகளை ஆலோசனைகளை கையாண்டு அவர்களை மன இறுக்கத்தில் இருந்து மீட்டு எடுக்க வேண்டும்.

நாளாந்தம் அவர்களின் மன பாரத்தை குறைக்க எம்மால் முடிந்த உதவிகளை வழங்கியே தீரவேண்டும்.

தொடரும்....

# வீக்கிப் பட்டறை

## நவம்பர்/டிசம்பர் 2022

**நீண்ட கால நோக்கத்திற்கான ஒத்துழைப்பு**

Lokalhistoriewiki.no இல் உள்ள தமிழ் செயற்திட்டத்திற்கான பணிக்குழு மாதம் ஒருமுறை வீக்கி பட்டறையை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. இதனூடாக இந்தப் பணிக்குழு நோர்வேயில் புலம்பெயர்ந்த தமிழர்களின் சுய ஆவணப்படுத்தலுக்கான தளத்தை உருவாக்கியுள்ளது. நோர்வேயில் உள்ள தமிழ்ச் சமூகம் மற்றும் நிர்வாக அதிகாரம் கொண்ட தமிழ் அமைப்புக்கள் பின்வரும் இரு நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய ஒத்துழைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

1. உங்கள் நிர்வாகக் குழுவுடன் வீக்கி செயற்திட்டம் பற்றிய தகவல் கூட்டம் ஒழுங்கு செய்தல் (மெய்நிகர் சந்திப்பு 30 நிமிடம்-1 மணி நேரம்)

2. சமூக ஒன்றுகூடலுடனான இயற்பியல் வீக்கிப் பட்டறை. அங்கு கட்டுரைகளை எழுதக் கூடிய எழுத்தாளர்களை சேர்த்தல். நோர்வேயிய மொழியில் எழுதக்கூடிய இளைஞர்களாகவோ அல்லது பெரியவர்களாகவோ இருக்கலாம். **(சுமார் 3-4 மணிநேர இயற்பியல் வீக்கிப் பட்டறை)**

*எதிர்கால வீக்கிப் பட்டறைகள் @ TRVS கட்டடம் (ஒசுலோ), 18:00-20:30*
*செவ்வாய்க்கிழமை 29.நவம்பர் 2022*
*புதன்கிழமை 14.டிசம்பர் 2022*

எழுதுவதற்கு மடிக்கணினி அல்லது தொடுதிரை (iPad) கொண்டு வரவும்.
நீங்கள் ஒரு பெறுமதியான வரலாற்றைக் கொண்டிருக்கிறீர்கள்!
ஆவணப்படுத்துவதற்கும் எதிர்கால சந்ததியினருக்குக் கடத்துவதற்கும் நீங்கள் பங்களிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

**சுய ஆவணப்படுத்தலுக்கான வீக்கி பட்டறையின் முக்கியத்துவம்**

முதல் தலைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழர்களின் புலம்பெயர்ந்த வரலாற்றின் தொடக்கப்புள்ளி ஆகும். "புலம்பெயர் தமிழர்" (Tamil Diaspora) என்று சர்வதேச அளவில் அறியப்பட்ட அடையாளத்திற்கு அவர்கள்தான் ஆதாரம். நோர்வே மற்றும் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களின் தகவல், சான்றுகள், நினைவகம், அடையாளம், பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கான தோற்றமும் அடித்தளமும் அவர்களின் வரலாறே ஆகும். அது பல்வேறு நாடுகளில் வாழும் இரண்டாம், மூன்றாம் மற்றும் வருங்கால சந்ததியினரின் அடையாளத்தின் அடிப்படையாகும். "நாம் யார்" என்ற கேள்விக்கு அவர்களே ஒரு வாழும் பதில்.

புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளில் சமூக தொடர்பாடல்களின் ஆவணங்கள் இல்லாமையால், சுய ஆவணப்படுத்தல் இன்னும் அவசியமாகிறது. ஒரு வெற்றிகரமான சுய ஆவணப்படுத்தலின் விளைவும், சுய ஆவணப்படுத்தல் இல்லாததன் விளைவும் நீண்ட கால ஓட்டத்திலேயே புலப்படும். வருங்கால சந்ததியினர் நோர்வேயில் தங்களின் வேர்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் தேடத் தொடங்கும் போது, சமகால ஆவணங்களின் இல்லாமை அல்லது பற்றாக்குறை இருப்பின் அவர்களின் அடையாளத்தை இழந்த நிலைக்கே தள்ளப்படுவார்கள். □



# போதிமரம்

**சின்னட்டிக் கதை**
**-மனோ-**

பணியிடத்தில் ஒரு வாடிக்கையாளன் தன்னுடைய பேர்சை அவசரத்தில் மறந்து போய்விட்டான். எடுத்துப் பார்த்தபோது சில்லறைகளால் பேர்ஸ் நிரம்பி வழிந்தது.
அதைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டு சக பணியாளனிடம் "வந்துகேட்டால் கொடு" என்றுவிட்டு என் பணியில் மூழ்கினேன்.

சிறிதுநேரத்தில் தொலைபேசி அழைப்பு வந்தது.
"உங்கள் பேர்ஸ் பாதுகாப்பாக இருக்கிறது. வந்து எடுத்துவிட்டுப்போங்கள்" என சக பணியாளன் கனிவாகப் பதிலளித்தான்.

உரிமையாளன் வந்து பேர்ஸை சரிபார்த்துவிட்டு என் சக பணிநண்பனை கேள்விக்குறிகளால் துளைத்தான்.
"இதில் பத்து யூரோ தாள் ஒன்று இருந்தது. காணவில்லை" என்றான்.
நண்பன் சாதாரணமாகச் சிரித்தபடி "நாங்கள் எடுக்கவில்லை" என்றதோடு அவன் அவ்விடத்தை விட்டும் அகன்றுவிட்டான்.
அவனோ ஒரு தடவையல்ல இரண்டுமூன்று தடவைகள் திரும்பத்திரும்ப அழுத்தினான்.
"எனக்கு காசு முக்கியமல்ல. இதற்குள் இருந்தது இப்போது இல்லை" அவ்வளவுதான் என்றான்.

அவ்வளவுதான்.
எனக்குள் இருந்த மிருகம் சீறிப் பாய்ந்தது.
குரலை உயர்த்தினேன்.
"திருவாளா, இங்க பார். நாங்கள் எடுப்பதாயிருந்தால் முழுவதையுமே எடுத்துவிட்டு உன்னுடைய பேர்ஸை கண்ணாலும் காணவில்லை என்று சொல்லியிருக்கலாம். நீ எங்களுக்கு நன்றி சொல்லாவிட்டால் கூட பரவாயில்லை. மனதைக் காயப்படுத்திவிட்டாய்" என்றேன்.

இதைச் சொல்லும் போது என்மனது படபடத்தது. குரல் உச்சத்தில் நின்றது.
"இப்ப ஏன் குரலை உயர்த்திறாய்?" என்றான் அவன்.
அவனும் கோபத்தில் நின்றான்.
நிலைமை கட்டுமீறி ஆபத்தை உருவாக்கலாம் என்பதை உணர்ந்தேன்.
அமைதியாகி என் வேதனையை அவனுக்கு உணரவைக்க முயன்றேன்.
அவன் அசையவில்லை. ஆனாலும் ஒப்புக்கு மன்னிப்புக்கோரியபடி வெளியேறினான்.

எனக்கு இப்போது கோபம் என் நண்பனில்.
"நீ சிரித்துக் கொண்டிருக்கிறாய். உனக்கு கோபமே வரவில்லையா?"என்றேன்.

"இதில என்ன கோவிக்கிறது? நாங்கள் எடுக்கேல்ல. அது உறுதி. அவனுக்கு சொல்லியாச்சு. இதுக்குமேல அவருக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருக்க வேண்டிய தேவை எனக்கில்லை."
அவன் தொடர்ந்தும் அமைதியாக சிரித்தபடியே இருந்தான். □

**இலங்கை அரசியலில் கடல் அட்டையும் தமிழ் அரசியல்வாதிகளின் அறிவீனமும்.**

# இலங்கையில் கடலட்டைத் தொழில்



*இரண்டாம் உலகமகா யுத்தம் முடிந்த காலத்திலேயே கடலட்டை எமக்கு அறிமுகமாயிற்று.
நாச்சிக்குடா மம்முக் காக்கா என்று கரையோரச் சமூகங்களால் கொண்டாடப்படும் முக்கம்மது காக்கா.
(இவர் "லத்தீப் மாஸ்ரர்" என்று 70களில் மிகவும் அறியப் பட்ட ஒரு முஸ்லிம் ஆசிரியரின் தந்தை என்று நினைக்கிறேன்) மற்றும் நாச்சிக்குடா ஹச்சுக்காக்கா, கறுத்த மரக்காயர், சூசை போன்றோர்களது முயற்சிகளால் கடலட்டைத் தொழில் எமது கரையோர மீனவச் சமூகங்களிடையே மிகப்பெரும் வருமானம் ஈட்டும் தொழிலாக நடைமுறையில் இருந்தது.*

*ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் ஆட்சியை ஏற்ற காலப் பகுதியில் இந்தக் கடலட்டைத் தொழில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக தொழிலாளர்களுக்கான சிறு கடன்களை வழங்கியும், கடலட்டைத் தொழிலுக்கான உபகரணங்களை மானிய விலையில் கொள்வனவு செய்ய ஆவன செய்தும் ஊக்குவித்தது. இந்தக் காலகட்டத்தில் கடலட்டைத் தொழில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.*

*இந்தக் கூட்டுறவு முறையின் மூலம் ஒவ்வொரு தொழிலாளர்களும் தனது உற்பத்தியைத் தமது பெயரிலேயே சிங்கப்பூர்ச் சந்தைக்கு கடற்தொழிற் சமாசத்தின் மூலம் நேரடியாக அனுப்பி வைத்தார்கள்.
அங்கு சந்தையில் இவர்களது உற்பத்திக்கான விற்பனைத் தொகையானது, ஏற்றுமதிச்செலவு, குறைந்தபட்ச சந்தைத்தரகு, மிகக்குறைந்த நிர்வாகக் கொமிசன் என தள்ளுபடிபோக மீதி அந்தப் படிக்கே சிங்கப்பூர் பண மதிப்பான வெள்ளியாகவே இலங்கை மக்கள் வங்கிக்கு வந்து சேரும். ஒரு வாரத்துக்குள் இலங்கை ரூபாயாக ஒவ்வொரு தொழிலாளியின் கணக்கிலும் வைப்பிலிடப்படும்.*

*1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் மறவன்புலவுச் சச்சிதானந்தன் கடலட்டை தொடர்பான சு.ழு (ஆய்வு அதிகாரி, அல்லது றிசேர்ச் ஒபிசர்) என நியமிக்கப் பட்டார்.
சச்சிதானந்தம் அவர்களது குழுவின் ஆய்வுப் பிரகாரம் எமது கடலில் 35வகையான கடலட்டை இருக்கிறதென அறிக்கை சமர்ப்பித்தார். (1972-73) இந்தக் கடலட்டைகளில் சர்வாங்க ஆயுள் 8மாத காலம் என்றும் சொன்னார்.
இல்லை, கடலட்டையின் ஆயுள் 18மாதங்களில் இருந்து 24மாத காலங்கள் வரை என எமது மீனவர்கள் ஆதாரங்களோடு நிறுவினார்கள்.
காரணம், மறவன் புலவு சச்சிதானந்தம் தனது ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கடலட்டை இனங்களானவை களக்கடல் அட்டைகளாகும்.
களக்கடலில் மட்டும் தங்கி வாழும் கடலட்டைகள் மழைக்காலத்தில் நன்நீர் தாக்கத்தால் விரைவில் உடல் அழுகி இறந்து விடக் கூடியன. ஆனால் ஆழ்கடல் அட்டையானது இந்த மழைநீர்த் தாக்கத்துக்கு உட்படாதவை.
தவிர, மறவன்புலவு சச்சிதானந்தம் சொன்னதுபோல எமது கடற்பிரதேசத்தில் 35வகையான கடலட்டை இனங்கள் மட்டுமல்ல, 60இற்கும் மேலான இனங்கள் உண்டு.
(சாட்டாமாறு, தாழை, கோரை போன்ற கடற்தாவரங்களில் ஒட்டுண்ணிகளாக இருக்கும் பல சிறு அட்டையினங்கள் ஆய்வு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை)*

*நாச்சிக்குடா ஹச்சுக்காக்காவுக்குச் சொந்தமான ஒரு காணியை அட்டைச் சங்கத்துக்கான கட்டிடம் அமைக்க 70களில் ஒதுக்கிக் கொடுத்தார்.
அது செயற்படுத்தப்படாமல் போய் விட்டது.
அதுபற்றி அறியக் கிடைக்கும் தகவல்:*

பின்னான காலங்களில் மறைந்த இராசநாயகம் (கிளிநொச்சி அரசாங்க அதிபர்) நாச்சிக்குடாவில் குடியமர்ந்த மக்களுக்காக அந்தக் காணியை பொதுத் தேவைக்கென ஒதுக்கிக் கொடுத்தார்.
(இப்போ அதுதான் ஒரு வேளாங்கண்ணி ஆலயம் அமைக்க வழங்கப்பட்டதாக அறிகிறேன்)

---

பிற்குறிப்பு:- 1.

---

இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர்களோடு ஒத்தாசையாக, சிப்பந்திகளாக இருந்த சீனர்கள் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தபின்னால் இவர்களும் நாடு திரும்ப வேண்டியிருந்தது.
இலங்கையில் குறிப்பாக மன்னார் யாழ்ப்பாணக் கடற்பகுதியில் பெருவாரியாகக் கிடைக்ககூடிய கடலட்டைகளை தங்கள் நாட்டுக்குப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும்பொருட்டு அணுகியவர்களில் சிலரின் பெயர்களே மேலே குறிப்பிட்டுள்ளேன். இதேபோல் மன்னார் பள்ளிமுனை மருசால், விடத்தல்தீவு ஜேம்ஸ், அந்திரேஸ், லூக்காஸ், மற்றும் வலைப்பாடு முடியப்பு, இரணைதீவு அமிர்தம், குருநகர் சிலுவைராசா, நாவாந்துறை ஞானப்பிரகாசம், மத்தியாஸ், அறுக்காஞ்சி, தொபியாஸ், ஆசீர்வாதம் போன்ற பல மூத்த கடலோடிகள், நயினாதீவு கடலோடி நாகமுத்தர், புங்குடுதீவு சின்னத்துரை, மெலிஞ்சிமுனை பாக்கியநாதர், கெட்டில் கதிர்காமர் போன்று பல முக்கியமான நபர்கள். இந்தக் கடலட்டைகளை எப்படிப் பதனிடுவது என்பது போன்ற முறைகளை சீனர்களே எமது தொழிலாளர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். தவிரவும் அதனைப் பதனிடுவதற்கான பிரம்மாண்டமான சீனச்சட்டிகளையும் அனுப்பி வைத்தார்கள்.

ஆரம்பத்தில் களக்கடலில் மட்டும் செய்யப்பட்டுவந்த கடலட்டைத் தொழில் பின்நாட்களில் ஆழ்கடல் தொழிலாக மாற்றமடைந்தது. மன்னாரிலும், தீவகத்திலும் இருந்த பாரம்பரிய சங்கு முத்துக்குளித் தொழிலாளர்கள் இதனைப் பெருமெடுப்பில் மேற்கொண்டார்கள்.

அன்று கால் வைக்கும் களக்கடலெல்லாம் குவிந்து காணப்பட்ட இந்த அட்டை இனங்கள் ஒட்டுமொத்தமாக அழிந்து போனதற்கான காரணம் ட்ரோலர் தொழிலாகும். அதிலும் இந்திய இழுவைப் படகுகளின் ராட்சத இரும்புக் குண்டுகளாலும், கதவுகளாலும் இந்த அட்டை இனங்களே மொத்தமாக அழிந்து போயிற்று.

தவிரவும்,
கடலட்டை வளர்ப்புக்கான பண்ணைகளை அமைக்கும் கடற்பகுதியை மிகவும் நிதானமாகத் தேர்வு செய்ய வேண்டும். இதில் மிக முக்கியமாக அவதானிக்க வேண்டிய இரண்டு விடையங்கள்:

1. இயற்கையாகவே மேய்ச்சலுக்காகவும், இருப்புக்காகவும், விருத்திக்காகவும் மீன்கள் வந்து நடமாடும் பகுதிகள் நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும்.

2. உள்ளூர்த் தொழிலாளர்களுக்கு இடையூறு இல்லாத இடங்களாகத் தேர்வு செய்ய வேண்டும்.

---

பிற்குறிப்பு:- 2.

---

உள்ளூர் அறிவு என்பது உள்ளூர் சமூகம் ஒன்று தனது நீண்ட காலசரித்திரத்திலும், அனுபவத்திலும் இயற்கையுடன் இடைத்தொடர்புற்று, பெற்று, சேகரித்து விருத்தி செய்துகொண்ட புரிதல்கள், திறன்கள், தத்துவங்கள் என யுனெஸ்கோ வரையறுக்கின்றது. இயற்கை பாதுகாப்பு, உணவு உற்பத்தி, காடுருவாக்கம், மருத்துவம், பேண்தகு நில, நீர்வளபாவனை முகாமைத்துவம், சூழல்சுற்றுலா, காலநிலை மாற்றம், அனர்த்தங்களை குறைத்தல், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் உள்ளூர் அறிவுச் செயற்பாடானது முக்கிய பங்காற்றுகின்றது.
ஒரு சமூகத்தின் உள்ளூர் அறிவானது அச் சமூகத்திற்காக நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் எல்லா திட்டங்களின் முடிவெடுக்கும்
அல்லது தீர்மானமெடுக்கும் நிலைகளில் உபயோகிக்கப்பட வேண்டும்.
அத்துடன் மேற்கத்தைய அறிவுசார் அபிவிருத்தித் திட்டங்களினால் உருவாகும் பாதகங்களைக் களைவதற்கும் உள்ளூர் அறிவுப் பொறிமுறை அதனுடன் சேர்ந்து உபயோகித்தல் ஒரு சிறந்த முறையாகவும் கருதப்படுகின்றது.
எனவே யாதாவது அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப் படுவதற்குமுன் அந்தத் திட்டங்களினால் நன்மையடைய அல்லது பாதிப்படையப்போகும் சமூகங்களின் பங்குபற்றுதலுடன் செய்யப்பட வேண்டும். எல்லா நடவடிக்கைகளிலும் (திட்டமிடுதலிலிருந்து, இறுதி முடிவெடுக்கும் வரை) சமூகங்களின் பங்கேற்பு இருப்பது உறுதி செய்யப்படவேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அந்தத் திட்டம் பேண்தகு அபிவிருத்தி திட்டமாக நிலைத்திருக்கும்.




Sophia 6år






Nore 4år

Anne 5år



Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585